உள்ளன. பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றும்போது பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதுகுறித்து முன்பே கூறியிருக்கிறேன். சுத்திகரிப்பு நிலையத்திற்கு நிலம் எடுப்பதில் பிரச்சினை ஏற்படுகிறது. நிறைய இடங்களில் depth அதிகமாக இருக்கும், அதாவது மணல் இருக்கக்கூடிய பகுதிகளில் depth அதிகமாக இருக்கும். இதுபோன்ற பல்வேறு சூழ்நிலைகள் இருக்கின்றன. நெருக்கமாக இருக்கக்கூடிய city–ல்தான் பைப் லைன் பதிப்பது போன்ற பணிகளைச் செயல்படுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது; இதுபோன்ற பிரச்சினைகளெல்லாம் இருக்கின்றன.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 6,000 குடிநீர் இணைப்புகள் வழங்குவது பற்றிக் கூறினார்கள். அதுகுறித்து, உடனடியாக துறைரீதியாக ஆய்வு செய்து, உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம், மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

29—

புதிய மீன் தொட்டி

***54278—திரு. கி. மாணிக்கம்:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், பாலமேடு அருகில் உள்ள சாத்தியார் அணையில் பழுதடைந்துள்ள மீன் தொட்டிக்கு மாற்றாக புதிய மீன் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2020 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்; இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனவை நனவாக்கி, நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் அவருக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தாலுகா, சாத்தியார் அணைக்கட்டில் மீன்குஞ்சு வளர்ப்புப் பண்ணை 1968–லிருந்து இயங்கி வருகிறது. 1,281 சதுர மீட்டர் கொண்ட, ஆண்டுக்கு 1.0 இலட்சம் மீன்விரலிகளை வளர்த்தெடுக்கக்கூடிய மீன் பண்ணையினை மேம்படுத்தும் பணியை மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை மதுரை மீன் துறை உதவி இயக்குநரால் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தூத்துக்குடி மீன்பிடித் துறைமுக திட்டக் கோட்டம், செயற்பொறியாளரால் திட்ட மதிப்பீடு ரூ.420 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, மீன் வளம் மற்றும் நீர் உயிரின வளர்ப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி, அதாவது, FAIDA*–ன்மூலம் நிதியுதவி பெற்று, புனரமைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம் அவர்கள்.*

திரு. கி. மாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களை தம் மக்கள் என்றும், 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்றும் வாழ்ந்து, இந்த மண்ணை விட்டு மறைந்தாலும் தமிழக மக்களின் நெஞ்சங்களில் என்றென்றும் நீங்காத இடத்தைப் பெற்றிருக்கும், நம்மையெல்லாம் வாழ வைத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மத்திய அரசிடமிருந்து 2019 ஆம் ஆண்டிற்கான சிறந்த ஆளுமை விருதையும், இந்தியாவிலுள்ள பெரிய மாநிலங்களில் சிறந்த மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையையும் பெற்றுத் தந்த, ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரிகளை இம்மாநிலத்திற்குப் பெற்றுத் தந்த, காவேரி டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட*

வேளாண் மண்டலம் என்று அறிவித்த, விவசாயிகளின் விடிவெள்ளி, குடிமராமத்து நாயகன், கொங்கு நாட்டுத் தங்கம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–50

தொடர்ந்து 10–வது முறையாக இம்மாமன்றத்தில், வளமான தமிழகத்தை உருவாக்கிட, புதிய வரிகளே இல்லாத, உலகம் போற்றும் உன்னதமான நிதிநிலை அறிக்கையைத் தந்திட்ட, ஜல்லிக்கட்டு நாயகன், இதய தெய்வம் அம்மா அவர்களின் நம்பிக்கை நட்சத்திரம், தென்பாண்டிச் சிங்கம், தேனி தந்த பூந்தென்றல், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்கி, எங்கள் மாவட்டக் கழகத்தினுடைய செயலாளர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் உள்ளிட்ட அனைத்து அமைச்சர் பெருமக்களையும் வணங்குகிறேன்.

சாத்தியார் அணையில் மீன்குஞ்சு வளர்க்கக்கூடிய திட்டம் நிறைவேற்றித் தரப்படும் என்று அறிவித்த மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், கொடைக்கானலில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2015 ஆம் ஆண்டு விதி 110–ன்கீழ் கொடைக்கானலில் மீன் பண்ணை அமைக்கும் பணிக்காக ரூ.10 கோடி வழங்கி, இந்தத் திட்டம் 15–7–2015 அன்று மீன் வளத் துறையின் சொந்த இடத்திலே பூமி பூஜை போடப்பட்டு தொடங்கப்பட்டது. மேற்படி இடம் கொடைக்கானல் மக்களுடைய குடிநீர்த் தேவைக்காகத் தேவை என்று கூறி, மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டு, திண்டுக்கல். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மாணிக்கம், நீங்கள் நன்றி சொல்லிவிட்டீர்கள். அடுத்து, சம்பந்தமில்லாமல் கொடைக்கானலுக்குப் போய்விட்டீர்கள். (குறுக்கீடு) இல்லை,

2020 பிப்ரவரி 17]

இல்லை. நீங்கள் இந்தக் கேள்வியை எப்போது முடிப்பது? சீக்கிரம் முடியுங்கள்.

திரு. கி. மாணிக்கம்: மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக 10–10–2015 அன்று 1.25 ஏக்கர் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மீன் வளத் துறையின் மூலமாக வழங்கப்பட்ட பணி நடைபெற்றபோது நீதிமன்றம் சென்று, நீதிமன்றத் தடையுத்தரவு பெற்றிருக்கிறார்கள். அந்த இடத்தில் மீன் பண்ணை அமைக்க மறு சீராய்வு மனு போடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் இதே முறையைப் பின்பற்றினீர்கள் என்றால்தான் நிறைய கேள்விகளைக் கேட்க நான் அனுமதிக்க முடியும். நீங்கள் அந்த முறையைப் பின்பற்றுவதில்லையே! நான் என்ன செய்வது? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானலிலே ரூ.9 கோடியே 75 இலட்சம் செலவில் மீன் பண்ணை அமைப்பது குறித்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2014–2015 ஆம் ஆண்டு விதி 110–ன்கீழ் அறிவித்தார்கள். அவர்கள் அறிவித்ததன் அடிப்படையிலே தொடர் நடவடிக்கை மேற்கொண்டு, அதன் அடிப்படையில் இரண்டு, மூன்று இடங்கள் பார்க்கப்பட்டு, பின் மண்ணலூர் என்ற கிராமத்தில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், மண்ணலூர் என்ற கிராமத்தில் அமைப்பதை எதிர்த்து திரு. எஸ்.எம். பாலகிருஷ்ணன் மற்றும் சிலர், உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, அந்தப் பகுதி ecologically sensitive area என்பதால் அங்கு மீன் பண்ணை அமைக்க அரசு அளித்த அனுமதியை உயர் நீதிமன்றம் இரத்து செய்தது. எனவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மேல்முறையீடு செய்து அங்கே மீன் பண்ணை அமைப்பது குறித்து ஆவன செய்வீர்களா என்ற கேள்வியைக் கேட்டிருக்கின்றார்கள். எனவே, உயர் நீதிமன்ற உத்தரவின்மீது மேல் முறையீடு செய்வது குறித்து, அரசு வழக்கறிஞரிடம் கருத்து பெறப்படும். அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.